# <u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>

## O.S. No. 94/2017

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 12.06.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : ராமலிங்கம் Father's Name : பெருமாள்

துவக்க நேரம் : 03.56P.M

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

1. இவ்வழக்கின்வாதி லட்சுமியின் கணவரும், நானும் நண்பர்கள் என்றால் சரிதான். வாதியின் கணவர் எனது நண்பர் என்பதால் வாதி கேட்டுக் கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதிகளின் குடும்பங்களை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். வாதியின் மாமனார் பெயர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

2. வாதி இவ்வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் அவரது தந்தைக்கு எதிராக மட்டும் தாக்கல் செய்துள்ளார். வாதியின் தாத்தா பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் பிறந்ததிலிருந்து லத்துவாடி கிராமத்தில்தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வாதி லட்சுமிக்கும், அவரது கணவருக்கும் திருமணம் எங்கு நடைபெற்றது என்றால் பெரம்பலூரில் நடந்தது. நான் சொல்வது தவறு என்றாலும், வாதி, பிரதிவாதிகளின் குடும்பங்களை பற்றி எனக்கு எந்த விவரங்களும் தெரியாமல் வாதி கேட்டுக் கொண்டதன் பேரில் தற்பொழுது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்து குறித்து வாதியின் தகப்பனாரான 1-ஆம் பிரதிவாதி ஆவணம் எதுவும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. தாவா சொத்து 1-ஆம் பிரதிவாதிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் பட்டா மூலம் பாத்தியப்பட்டது. எந்த வகையான பட்டா மூலம் 1-ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் அந்த நிலம் தரிசாக இருந்தது, வாதி அனுபவித்து வந்ததன் அதனடிப்படையில் பட்டா வழங்கினார்கள். தாவா சொத்து வாதி எந்த ஆண்டிலிருந்து அனுபவித்து வருகிறார் என்றால் கடந்த 1980-ஆம் ஆண்டிலிருந்து அனுபவித்து வருகிறார்.

4. வாதிக்கும், அவரது கணவருக்கும் எந்த ஆண்டு நடைபெற்றது என்றால் நான் திருமணத்திற்கு செல்லவில்லை, அதனால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. நான் சொல்வது அனைத்தும் தவறு என்றாலும், வாதி தாவா சொத்திற்கு எப்பொழுது குடி வந்தார் என்ற விவரமும், வாதியின் மாமனார் பெயர் மற்றும் குடும்ப விவரங்கள் எதுவும் தெரியாமல் வாதி கேட்டுக் கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. வாதியின் கணவர் எப்பொழுது சிங்கப்பூருக்கு சென்றார் என்றால் கடந்த 15 ஆண்டுகளாக சிங்கப்பூரில் இருந்து வருகிறார். அவருக்கு மாத சம்பளம் எவ்வளவு என்றால் சுமார் ரூ. 60,000/- இருக்கும். நான் சொல்வது தவறு என்றாலும், நான் வாதி, அவரது கணவர், அவர்களது குடும்ப விவரங்கள் பற்றி எதுவும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனாரான 1-ஆம் பிரதிவாதி தற்பொழுது எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் ஊரிலிருந்து சுமார் 2 கிமீ தூரத்தில் உள்ள அவரது வயலில் குடியிருந்து வருகிறார். நான் சொல்வது தவறு என்றாலும், வாதியின் தகப்பனார் தற்பொழுது வரை தாவா சொத்தில் உள்ள ஒரு வீட்டில்தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள 2-வது வீட்டில் 1-ஆம் பிரதிவாதி குடியிருந்து வருவதற்கு ஆதாரமாக அவரது பெயரில் ஆதார் கார்டு, குடும்ப அட்டை ஆகிய ஆவணங்கள் உள்ளது என்றாலும், அந்த வீட்டிற்கு மின் இணைப்பு இருந்து தற்பொழுது துண்டிக்கப்பட்டுவிட்டது என்றாலும், அவர் அந்த வீட்டில் இருந்துதான் இன்றும் நீதிமன்றத்திற்கு வந்து சென்றார் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்:04.14P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.94/2017, Dt.12.06.2026.